## மெட்ரோ ரயில் நிலையங்களில்

# இ-பைக் சேவை விரிவாக்கம்

### அதிகாரி தகவல்




சென்னை, டிச. 17: மெட்ரோ ரயில் இ-பைக் சேவைக்கு பொதுமக்கள் மத்தியில் அதிக வரவேற்பு கிடைத்துள்ளதால், மேற்கொண்டு பல நிலையங்களில் இச்சேவையை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் பயணிகளின் வசதிக்காக 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ சேவையையும், 5 நிலையங்களில் ஷேர் டாக்சி சேவையையும், 15 நிலையங்களில் வாகன இணைப்பு சேவையையும் நடைமுறைப்படுத்தி உள்ளது. இந்த சேவை முதன்முதலாக கிண்டி, ஆலந்தூர், வடபழனி மற்றும் அண்ணாநகர் ஆகிய 4 மெட்ரோ ரயில் நிலையங்களில் அறிமுகம் செய்யப்பட்டது.

வோகோ என்ற தனியார் நிறுவனத்துடன் இணைந்து இச்சேவையை நிர்வாகம் அறிமுகப்படுத்தியது. இதில் 1 கி.மீ தூரத்திற்கு ரூ.4 கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் 'fly' என்ற தனியார் நிறுவனத்துடன் இணைந்து பயணிகளின் வசதிக்காக நிமிடத்திற்கு 1 ரூபாய் கட்டணத்தில் இ-பைக் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சேவைக்கு தற்போது பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளதால் இதை மேலும் பல மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாள்தோறும் நூற்றுக்கும் மேற்பட்டோர் இச்சேவையை பயன்படுத்த ஆரம்பித்துள்ளதால் எந்தெந்த நிலையங்களில் சேவையை அறிமுகப்படுத்தலாம் என்பது குறித்தும் ஆய்வு செய்து வருகின்றனர்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

காற்று மாசை ஏற்படுத்தாத இந்த இருசக்கர வாகனம் முற்றிலும் மின்சாரத்தால் இயங்கக்கூடியது என்பதால் பயணிகள் மத்தியில் அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை குறிப்பிட்ட நீல வழித்தடத்தில் இச்சேவையை பயணிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். நிமிடத்திற்கு 1 ரூபாய் மட்டுமே கட்டணம் என்பதால் நாள்தோறும் நூற்றுக்கும் மேற்பட்டோர் இச்சேவையை பயன்படுத்தி வருகின்றனர்.

முதல்கட்டமாக ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் 6 இ-பைக்குகள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன. இதை 15 ஆக அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு கூறினார்.